கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில், நேற்று (20.09.2023) சென்னை, கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மாண்டல இணைப்பதிவாளர்கள் ஆகியோர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு.ந.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி ஜெ.விஜயராணி, சிறப்புபணி அலுவலர் (தமிழ் நாடு கூட்டுறவு வங்கி) எம். பி.சிவன்அருள், ஆகியோர் கலந்துகொண்டனர்.

பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா:

பா.ஜ.க.வின் ஏமாற்று அரசியலுக்கான எடுத்துக்காட்டு!

ப.சிதம்பரம் கருத்து!

சென்னை, செப். 21-

முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம், எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறப்பட்டு இருப்பதாவது:

மகளிருக்கான இடஒதுக்கீடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மசோதா, பா.ஜ.க.வின் ஏமாற்று அரசியலுக்கான சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. அந்த மசோதாவை, நாரி சக்தி கேலிக்கூத்து மசோதா என்றுதான் அழைக்க வேண்டும்.

அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு வரை காத்திருக்கும்படி இந்திய பெண்களை அந்த மசோதா ஏளனம் செய்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்த பின்பு, தொகுதி மறுவரையறை முடியும் வரை மேலும் காத்திருக்கும்படி பெண்களை கூடுதலாக கிண்டல் செய்கிறது.

இந்திய பெண்கள் அனைவருமே இதற்காக காத்திருப்பதற்கான காரணத்தை ஒன்றிய அரசு விளக்கி இருக்க வேண்டும். அதன் பிறகு அவர்களை காலவரையறையின்றி காத்திருக்கக் கூறலாம். இது ஒரு மசோதா அல்ல, தேர்தலுக்கான கவர்ச்சி அறிவிப்பாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் உள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில், நேற்று (20.09.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "இதழாளர் கலைஞர் என்ற குழுவின் ஆலோசனைக் கூட்டம், இக்குழுவின் தலைவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சருமான மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும், உறுப்பினர் செயலருமான த. மோகன், உறுப்பினர்கள். இந்து ராம், நக்கீரன் கோபால், கே.வைத்தியநாதன், விஜய் சங்கர், பாபு ஜெயக்குமார், அருண்ராம், கோவி. லெனின், மு. குணசேகரன், செந்தில்வேலன் (வேல் வீச்சு) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக

சாலைப்பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்!

சென்னை மாநகராட்சி ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

சென்னை, செப். 21-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை மெட்ரோ இரயில், மின்துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் இன்று (20.09.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுடனான வெள்ளத்தடுப்பு மேலாண்மை தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

பொதுமக்களுக்கு இடையூறு மற்றும் பாதிப்பு ஏற்படாத வகையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை வாரியான அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். மேலும், ஒவ்வொரு துறைகளிலும் என்னென்ன பணிகள் நடைபெற்று வருகின்றன எனக் கேட்டறிந்து, வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்து, சாலை வெட்டுக்கள் மற்றும் சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர்செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அவரகளின் அறிவுரையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளை தரமாகவும், மக்களுக்கு இடையூறின்றியும் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக விரைந்து முடித்திட வேண்டும். சாலைகளில் இதரப் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை வெட்டுக்களை உடனடியாக சீர்செய்திட வேண்டும். சென்னை மெட்ரோ இரயில், சென்னை குடிநீர் வாரியம், மின்துறை, நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை தாமதமியன்றி முடித்திட வேண்டும். பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் மக்களுக்கு உரிய பாதுகாப்பு தடுப்புகளை செய்திட வேண்டும். நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை இம்மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும். மழைநீர் வடிகால் இணைப்பு இல்லாத இடங்களில் உடனடியாக இணைப்புகளை ஏற்படுத்தும் பணிகளை செய்து முடிக்க வேண்டும். மழை நீர் வடிகால், ஆறுகள், கால்வாய்கள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும் தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு முடித்திட வேண்டும்.

வடகிழக்குப் பருவமழையை எதிர்நோக்கி பருவழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதுடன் அனைத்து அலுவலர்களும் விழிப்புணர்வுடன் பணியாற்றிட வேண்டும். சுரங்கப்பாதைகளிலும், இதர எப்பகுதிகளிலும் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நிவாரண மையங்களை தயார்நிலையில் வைத்திட வேண்டும் என நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

செய்தியாளர் சந்திப்பில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தினை நேற்று நடத்தினார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள், மழைநீர் வடிகால் இணைப்பு பணிகள் மற்றும் சாலைப் பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகிறது என்பது, என்ன நிலையில் உள்ளது என்பது பற்றியும் கேட்டறிந்தார். மேலும், சென்னை குடிநீர் வாரியம் சார்பில் எந்தெந்த இடங்களில் குழாய்கள் போடப்பட்டுள்ளது. அங்கு சாலைகள் எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விரிவாகக் கேட்டறிந்து அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, இன்று நடைபெற்ற கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, மின்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்களிடம் எந்தெந்த இடங்களில் சாலைகள் பழுதடைந்துள்ளது எனக் கேட்டறிந்து, அவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து ஒரு வார காலத்திற்குள் அவற்றை சரிசெய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

மின்துறை மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் புதிய பணிகள் எதுவும் மேற்கொள்ளாமல், ஏற்கனவே தொடங்கப்பட்ட பணிகளை விரைந்து முடித்திடவும், சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர் செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் களில் இணைப்புகள் இல்லாத இடங்களில் மழைநீர் வடிகால் இணைப்புகள் மேற்கொள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை விரைவில் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இணைப்பு பணிகள் முடிவுறாத இடங்களில் பாதுகாப்பு கருதி தடுப்புகள் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்காக தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ், ரூ.19.70 கோடி மதிப்பீட்டில் 14 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட 44 கனரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் 8 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட 30 இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் என மொத்தம் ரூ.30.28 கோடி மதிப்பீட்டில் 74 காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு நிர்பயா திட்ட நிதியின் கீழ், ரூ.4.37 கோடி மதிப்பீட்டில் 15 நடமாடும் மகளிர் ஒப்பனை அறை வாகனங்கள் ஆகியவற்றின் செயல்பாட்டினை ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், கூடுதல் காவல் ஆணையாளர் (போக்குவரத்து) ஆர்.சுதாகர், மாநகராட்சி கூடுதல் ஆணையாளர்கள் சங்கர்லால் குமாவத், (சுகாதாரம்), திருமதி ஆர்.லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம்.பி.அமித், (தெற்கு), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

தமிழ்நாடு முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

கழக நெசவாளர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 21-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் சிறப்பாக நலத்திட்ட உதவிகளுடன் கொண்டாட நடைபெற்ற நெசவாளர் அணியின் மாவட்ட, மாநகர தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம், தியாகராயர் நகர், அக்கார்டு ஓட்டலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் மாநில நெசவாளர் அணி ஓ. ஏ. நாகலிங்கம், வரவேற்புப் பேசினார்.

மாநில செயலாளர்கள்: எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி தி. அன்பழகன், பரணி. கே. மணி, நெல்லை சொ. பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன், துணை செயலாளர்கள்: வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், கோவிந்தசாமி, ஆ. ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் / கழக துணை பொது செயலாளர் க. பொன்முடி, கைத்தறி & துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, சென்னை (மே) மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினர்.

சென்னை (மே) மாவட்ட அமைப்பாளர் என். அரவிந்தகுமார் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திராவிட இயக்கத்தின் முதுபெறும் தலைவரும். தந்தை பெரியாரின் குருகுலத்தில் பயின்று. பேரறிஞர் அண்ணாவின் பாசறையில் வளர்ந்து, தமிழ்த்தாயின் தலைமகன், எழுத்தாற்றல், பேச்சாற்றல், நிர்வாகத் திறமை ஆகியவற்றில் ஆளுமையோடு தன்மான உணர்வுக்கும், சுயமரியாதை சிந்தனைக்கும் வழிவகுத்து நம் ரத்ததோடும். ரத்த நாளங்களோடும் இரண்டறக் கலந்துள்ள தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவர் தன்னுடைய 80 ஆண்டுகால பொது வாழ்க்கையில் 50 ஆண்டுகாலம் கழகத் தலைவராகவும், 13 முறை சட்டமன்ற தேர்தலில் களம்கண்டு வெற்றி வாகை சூடி சாதனை படைத்தவரும், 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று, மாநிலத்தில் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை தீட்டி தன் ஆட்சிக்காலத்தில் அதனை நடைமுறைபடுத்திய இந்திய ஜனநாயக காவலராக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நலத்திட்டங்கள் வழங்கியும், கழக அரசின் விளக்கியும், அனைத்து மாவட்டங்களிலும் நெசவாளர் அணி சார்பில் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக, கண்காட்சி நடைபெறும் இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நெசவாளர்கள் மற்றும் நெசவுத் தொழில் வளர்ச்சிக்காக செய்த நலத்திட்டங்களை விளக்கும் படங்கள் வைக்கப்பட்டு. கழக அரசின் நெசவாளர்களுக்கான எதிர்கால திட்டங்களான ஜவுளி நகரம், ஜவுளிப் பூங்காக்கள் குறித்த காணொலி படங்கள் காட்சிப்படுத்துதல் எனவும், கண்காட்சியில் கலந்து கொள்பவர்கள் பிளாஸ்டிக்கை தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பருத்தி துணிப்பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் "மீண்டும் மஞ்சப்பை திட்டத்திற்கு" வலுசேர்க்கும் விதமாக பருத்தி நூலில் நெசவு செய்யப்பட்ட பைகளில் கலைஞர் நூற்றாண்டு இலட்சினை பொறித்து வழங்கிடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை கிழக்கு மாவட்டப் பிரதிநிதி

வே.து.தாமரைச்செல்வன் இல்ல மணவிழா! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்து!

மேயர் பிரியாராஜன் - ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, செப். 21-

சென்னை கிழக்கு மாவட்டப் பிரதிநிதி வே.து. தாமரைச்செல்வன் இல்ல மணவிழா நேற்று (20.9.2023) காலை வேப்பேரி ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

சென்னை புரசைவாக்கம் வே.து.பரிமளச் செல்வன் - கௌசல்யா ஆகியோரின் புதல்வர் து.ப.வசிம் என்கிற வெற்றிச் செல்வனுக்கும். சென்னை மாங்காடு கே.இஸ்மாயில்-அஜிஜாமா (லேட்) ஆகியோரின் புதல்வி இ.பைசல் பாத்திமாவுக்கும் திருமணம் நேற்று காலை வேப்பேரி ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

வே.து.தாமரைச்செல்வன்,தா.குயினியம்மாள், இருதயராஜ், கனிமொழி, அறிவழகன், தமிழரசி வரவேற்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

மேயர் பிரியாராஜன், சட்ட மன்ற உறுப்பினர்கள் - ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல் மற்றும் கலாநிதி வீராசாமி எம்.பி., சாமிக் கண்ணு, செ.தமிழ்வேந்தன், வி. சுதாகர், கோ.ஏக்கப்பன், டி.லோகேஷ், நா.துலுக்காணம், பெரம்பூர் ராஜன், பட்டூர் ஜபருல்லா, எஸ். தமிழ்ச்செல்வி, புனிதவதி எத்திராஜன், சுதா தீனதயாளன், எஸ்.ரமணி, மு.சரவணன், எல்.சுந்தரராஜ், பி.ஜெ. துரை சிங்கம், ஜி.தாமோதரன், ஜி.ராமு, இரா.கலைவேந்தன், கனல் கங்கா, எல். பாண்டு ரங்கன் மற்றும் வட்டச் செயலாளர்கள்,வி. கா.வெங்கடேசன், எம். தமீம், புல்லு (எ) சுரேஷ், டி.கருணாநிதி, திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள், அ. கோவிந்தன், த.கருணாநிதி, பி.சுகுமார், வனஜா சண்முகம், அ.கருணாநிதி, மாவட்டப் பிரதிநிதிகள் நெல்லை மா. முத்தையா, கி.நாகலங்கம்,அ.கதிரவன், எல்.சுப்பிரமணி, எச்.திவாகர், வெல்டிங் பாபு, மெடிக்கல் கே. ஆர். சதீஷ், மைனர் பாபு, கே.எஸ்.சுரேஷ், 76வது வட்டக் கழக நிர்வாகிகள் ஜி. ஏழுமலை, ஆ.குருமூர்த்தி, ஒட்டேரி ஆர்.சூரி, ரா. ஞானசௌந்தரி, கோ.முருகா, என். எம்.செந்தில்சரவணன், கே.முரளி (எ) குள்ளா, டி. நீதிதேவன், வி.டில்லி ராஜ், பி.மலர் மற்றும் அ.ச.அன்புராஜி, தா.செல்வராஜி, ஜே. ராஜேந்திரன், செந்தில்விஜய், அ.டிக்ரூஸ், மோசஸ் ராஜ், ம.சு.நாகராஜி, மூர்த்தி, தா.இலக்கியவேந்தன், தா.புகழேந்தன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர்.

வட்டச் செயலாளர்கள் எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன் மற்றும் வேலு.தாமரைச்செல்வன், எஸ். மணி மேகலை ஆகியோர் நன்றி கூறினர்.

கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழக அவைத் தலைவர்

எஸ்.எம்.துரையரசன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப். 21 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் வடக்கு பகுதிக் கழக அவைத் தலைவர் எஸ்.எம். துரையரசன் அவர்கள் நேற்று (20.9.2023 - புதன்கிழமை) மாலை இயற்கை எய்தினார் என்பதினை தெரிவிக்க வருந்துகிறோம்.

எஸ்.எம்.துரையரசன் அவர்கள் இரண்டு முறை பகுதிக் கழகத்தின் அவைத் தலைவராக பணியாற்றியவர். ஒருமுறை சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பதவி வகித்தவர். இது நாள் வரை கழக பணியினையும், மக்கள் பணியினையும் தீவிரமாக ஆற்றியவர்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்தும் பகுதிச் செயலாளர் மு.ராசா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், குடும்பத்தினர், நண்பர்கள் பலர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (21.9.2023 - வியாழக்கிழமை) மாலை 3 மணியளவில், அன்னாரின் இல்லமான, தசரதபுரம், 4 வது தெரு, சாலிகிராமம் இருந்து புறப்பட்டு ஏ.வி.எம். அருகில் உள்ள சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் அரசு வணிக வளாகத்தில் அமைந்துள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாநில மீனவர் அணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தி சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா. மீனாட்சிசுந்தரம்

செப்டம்பர் 21 (2020)

1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "மா.மீ" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். "எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.